**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**

**ஊத்துக்குளி**

**அசல் வழக்கு எண் 16/2023**

**PW: 1**

2023–ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள், 30 ஆம் நாள், வாதி தரப்பு (வா.சா.1) சாட்சியின் வாக்கு மூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ன் படி திரு.பா.தரணீதர், பி.ஏ., எல்.எல்.எம், மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், ஊத்துக்குளி, அவர்களால் ஆனையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| Name | ஜெகதீஸ்வரன் | Caste | |
| Father Name | ரவிசந்திரன் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | 30 |

தேதி 30.10.2023

**<u>முதல் விசாரனை</u>**

திருப்பூர் மாவட்டம், அவினாசியில் இயங்கிவரும் கனரா வங்கியின் மேலாளரும், வங்கியால் அதிகாரம் வழங்கப்பட்ட நபருமான ரவிசந்திரன் மகன் ஜெகதீஸ்வரன் என்னும் நான் எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். நான் அதை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும்.

**<u>ஆவணங்கள்</u>**

1. 06.03.2023 ம் தேதிய கனரா வங்கி திருப்பூர் மண்டல அலுவலகத்தால் வா.சா.1 க்கு வழங்கப்பட்ட அனுமதி கடிதம் நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 18.09.2015 ம் தேதிய பிரதிவாதி வாதி வங்கிக்கு கொடுத்த கடன் விண்ணப்பம் அசல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 02.11.2015 ம் தேதிய பிரதிவாதி வாதி வங்கிக்கு எழுதி கொடுத்த கல்வி கடன் பத்திரம் அசல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 08.10.2018 ம் தேதியில் பிரதிவாதி வாதி வங்கிக்கு கொடுத்த கடன் நிலுவை சம்மந்தமான ஒப்புகை அசல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. 20.09.2021ம் தேதியில் பிரதிவாதி வாதி வங்கிக்கு கொடுத்த கடன் நிலுவை சம்மந்தமான ஒப்புகை அசல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. 14.08.2015ம் தேதிய நந்தா பொறியியல் கல்லூரியால் வழங்கப்பட்ட சான்று அசல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. 02.11.2015 முதல் 26.01.2023 வரையிலான பிரதிவாதியின் கல்வி கடன் கணக்கு பட்டியல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

**(பிரதிவாதிகள் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்பட்டதால் பிரதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சி கையெழுத்தும்/கைரேகை பெறப்பட்டது.

மாவட்ட உரிமையில் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.